**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC.No. 8287/2014**

Date. 12.01.2026

பெயர்: ஆறுமுகம்

வழக்கு சாட்சி. பு.சா.1

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 3ம் எதிரியின் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கையும் இந்த வழக்குடன் சேர்ந்து நடத்த நான் முயற்சிகள் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மூன்றாம் எதிரி மீதான வழக்கை இந்த வழக்குடன் சேர்த்து நடத்தினால் இந்த வழக்கு பொய்யான வழக்கு என்று நிரூபணம் ஆகி விடும் என்பதால் நான் சேர்த்து நடத்தவில்லை என்றால் சரியல்ல. ஒன்று முதல் மூன்று வரையிலான எதிரிகளுக்கு முறையாக அறிவிப்பு அனுப்பப்பட்டு சார்வு செய்யப்படாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இந்த வழக்கு நிலைக்கேத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிரிக்கு தவறான முகவரியை கொடுத்து அறிவிப்பு முறையாக சார்வு செய்யப்படாமல் தபால் அலுவலரின் உதவியுடன் தவறான மேற்குறிப்பு செய்யப்பட்டு பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. பதிவாளர் அலுவலகத்தில் ஒன்றாம் எதிரியின் பதிவு எண்ணை பெற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரியல்ல. சாட்சி பழனிச்சாமி, முருகேசன் ஆகியோர்கள் என்னிடம் வந்து பத்திரிகை விளம்பரம் குறித்து சந்தேகத்துடன் கேட்டதாக என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அதனை அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், நீதிபதி போன்றவர்களுக்கு பினாமியாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள

நிலையில், மேற்படி நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பெயர்கள் பொய்யானது என்றும், அதனால் தான் நான் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் விவரங்கள் என்னுடைய அறிவிப்பில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள நபர் ஒரு கற்பனை நபர் என்றும், அதனால் தான் அவருக்கு முறையான முகவரி இல்லை என்றும், அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5. 3ம் எதிரியாக காட்டப்பட்டுள்ள நபர் எனக்கு வேண்டப்பட்ட நபர் என்றும், அவருடன் கூட்டு சேர்ந்து பொய்யாக போர்முரசு என்ற வார இதழ் (பு.த.சா.ஆ.1) தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வார இதழில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் 1ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், மற்ற எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2ம் எதிரிகள் கூட்டாக மேற்படி வார இதழில் கட்டுரையை வெளியிட்டுள்ளார்கள் என முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல.

6. நான் அரசியல் கட்சியில் பிரமுகராக இருப்பதால் என்னை விளம்பரப்படுத்துவதற்காக நானே பொய்யான விவரங்களை உருவாக்கி எந்த வகையிலும் சம்பந்தமில்லாத ஒன்றாம் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு 241/ 2007ல் ஒன்பதாம் பிரதிவாதியான பவானி தாலுகா, ஆப்பக்கூடல் கிராமம், கவுந்தப்பாடி மெயின் ரோட்டில் வசிக்கும் பெரியசாமி மகன் சுமார் 45 வயது உள்ள சத்யன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

7. அறிவிப்பு மற்றும் புகாரில் கூறாத சங்கதிகளை பின்னிட்டு சாட்சிய பிரமாணத்தில் உண்மைக்கு புறம்பாக பொய்யான தகவல்களை கூறி ஆரம்ப நிலையில் இருந்து பொய் வழக்கு போட முயற்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகார் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.01.12 17:31:01 -0800

Judicial Magistrate No.III,

Erode.